## இலங்கைப் பரீட்சைத் திணைக்களம்
## கல்விப் பொதுத் தராதர (சாதாரண தர)ப் பரீட்சை - 2018 டிசெம்பர்

மேற்படி பரீட்சைக்குத் தோற்றும் சகல பாடசாலைகள் மற்றும் தனிப்பட்ட விண்ணப்பதாரிகளுக்கென 2018 ஏப்ரல் மாதம் 24ஆம் திகதி தொடக்கம் மே மாதம் 15ஆம் திகதி வரை விண்ணப்பங்கள் ஏற்றுக்கொள்ளப்படும். இங்கு காணப்படும் மாதிரி விண்ணப்பப்படிவம் தனிப்பட்ட விண்ணப்பதாரிகளுக்கு மாத்திரமாகும். சகல தனிப்பட்ட விண்ணப்பதாரிகளும் இவ்வறிவித்தலை பூரணமாக வாசித்து நன்கு விளங்கிக்கொண்டு தமது விண்ணப்பப்படிவத்தைப் பூர்த்தி செய்தல் வேண்டும். **விண்ணப்பப்படிவத்தில் நகர எண், பாட எண் ஆகியவற்றைக் குறிப்பிடும்போது சரியான பாட எண்ணைக் குறிப்பிடுவதில் விசேட கவனமெடுத்தல் வேண்டும்.**

02. **பாடசாலை விண்ணப்பதாரிகளுக்கான விண்ணப்பங்கள் :**

இதற்கு முன்னர் க.பொ.த (சா.தர)ப் பரீட்சைக்கு மாணவர்கள் தோற்றிய அரசாங்கப் பாடசாலைகளுக்கும் மற்றும் அங்கீகரிக்கப்பட்ட பிரிவெனாக்களுக்கும் உரிய விண்ணப்பப்படிவங்கள் 2018.04.24 ஆம் திகதிக்கு முன் கிடைக்கும் வகையில் தபாலில் அனுப்பி வைக்கப்பட்டுள்ளன. இதுவரையிலும் ஏதாவதொரு பாடசாலைக்காவது இவ்விண்ணப்பப்படிவங்கள் கிடைக்கவில்லையாயின் உடனடியாக இத்திணைக்களத்தின் பாடசாலைப் பரீட்சைகள் ஒழுங்கமைப்புக் கிளைக்கு அதுபற்றி உடனடியாக அறிவிக்க வேண்டும்.

**இப் பரீட்சைக்கு பாடசாலையிலிருந்து விலகிய விண்ணப்பதாரிகள் மாத்திரமே தனிப்பட்ட பரீட்சார்த்திகளாக விண்ணப்பிக்கத் தகுதியுடையவர்களாவர். பாடசாலையில் கற்றுக்கொண்டே தனிப்பட்ட பரீட்சார்த்தியாக விண்ணப்பிப்பது சட்டவிரோதமானது. அவ்வாறானவை கண்டறியப்படின் பரீட்சைத் தடைக்குட்படுவார்கள்.**

03. **தனிப்பட்ட பரீட்சார்த்திகள் :**

அரசாங்கப் பாடசாலைகளில், கட்டணம் அறவிடப்படாத அங்கீகரிக்கப்பட்ட பாடசாலைகளில் அல்லது அங்கீகரிக்கப்பட்ட பிரிவெனாக்களில் கற்றுக்கொண்டிராத எவரும் க.பொ.த (சா.தர)ப் பரீட்சைக்குத் தனிப்பட்ட முறையில் விண்ணப்பிக்க முடியும். இப்பரீட்சைக்காக தனிப்பட்ட பரீட்சார்த்திகளிடமிருந்து பரீட்சைக்கான விண்ணப்பங்கள் 2018 மே மாதம் 15ஆம் திகதி வரை ஏற்றுக்கொள்ளப்படும்.

04. **தனிப்பட்ட பரீட்சார்த்திகள் பரீட்சைக்குத் தோற்றுவதற்காக கொடுக்கப்பட்டுள்ள நகரப்பட்டியலிலிருந்து தமது நிரந்தர வதிவிடத்திற்குக் கிட்டிய நகரத்தைத் தெரிவு செய்ய வேண்டும். (அந்தந்த மாவட்டங்களின் கீழ் நகரங்கள் காட்டப்பட்டுள்ளன.) அவ்வாறு தெரிவு செய்யாவிடத்து, வேறு பரீட்சை நிலையம் கிடைக்கப்பெற்றாலோ அல்லது நீங்கள் தெரிவுசெய்த நகரத்தையோ பின்னர் மாற்றம் செய்ய முடியாது.**

05. இவ்வறிவித்தலில் தரப்பட்டுள்ள மாதிரி விண்ணப்பப்படிவத்திற்கு அமைவாக விண்ணப்பப்படிவங்கள் பரீட்சார்த்திகளினாலேயே தயாரிக்கப்பட வேண்டும்.

06. விண்ணப்பப்படிவங்கள் 28 X 21 செ.மீ. அளவுடைய தாளில், 01 முதல் 12 வரையான கூடுகள் முதற் பக்கத்திலும் 13 முதல் 14 வரையான கூடுகள் மறுபக்கத்திலும் அமையத்தக்கதாக தயாரிக்கப்படல் வேண்டும். நீங்கள் அனுப்பும் விண்ணப்பப்படிவம், மாதிரி விண்ணப்பப்படிவத்தை ஒத்திருக்க வேண்டும்.

07. பூர்த்தி செய்த விண்ணப்பப்படிவத்தை பதிவுத் தபாலில் **"பரீட்சை ஆணையாளர் நாயகம், பாடசாலைப் பரீட்சைகள் ஒழுங்கமைப்புக் கிளை, இலங்கைப் பரீட்சைத் திணைக்களம், தபாற் பெட்டி 1503, கொழும்பு"** எனும் முகவரிக்கு அனுப்பி வைக்க வேண்டும். விண்ணப்பப்படிவம் அனுப்பப்படும் உறையின் இடதுபக்க மேல் மூலையில் **"க.பொ.த. (சா.தர)ப் பரீட்சை டிசெம்பர் 2018, நகர எண் :.........."** எனக் குறிப்பிடவும்.

08. ஒரு விண்ணப்பதாரி **ஒரு விண்ணப்பப்படிவத்தை** மட்டுமே அனுப்புதல் வேண்டும். எவரேனும் **ஒன்றுக்கு மேற்பட்ட விண்ணப்பங்களை அனுப்பினால் அவரது பரீட்சார்த்தியாக தோற்றும் இயலுமை அல்லது பெறுபேறு வெளியிடப்பட்ட பின்னர் முழுப் பெறுபேறுகளும் முற்றாக இரத்துச்செய்யப்படும் என்பதை கட்டாயம் அறிந்திருத்தல் வேண்டும். அத்தோடு நீண்ட காலப் பரீட்சைத் தடைக்கும் உள்ளாக நேரிடலாம்.** மேலும் ஓர் உறையினுள் உள்ளடக்கப்பட வேண்டியது ஒரு விண்ணப்பப்படிவம் மாத்திரமே ஆகும். விண்ணப்பப்படிவங்களை சரியாகவும் தெளிவாகவும் தமது கையெழுத்தில் பூரணப்படுத்துவதுடன் அதற்காக வழங்கப்பட்டுள்ள அறிவுறுத்தல்களையும் பின்பற்ற வேண்டும்.

09. வேறு நிறுவனங்களால் தயாரிக்கப்பட்டு **அச்சிடப்பட்டுள்ள படிவங்களை** இதற்காகப் பயன்படுத்துவதாயின் இவ் அறிவுறுத்தலில் காட்டப்பட்டுள்ள **பாட இலக்கங்களும் நகர இலக்கங்களும்** தரப்பட்டுள்ள ஏனைய **சகல விவரங்களும் ஒத்ததாக இருத்தல்** அவசியம். அத்துடன் பிற நிறுவனங்களால் தயாரிக்கப்பட்ட விண்ணப்பப்படிவங்களில் உள்ள பாட இலக்கங்கள், நகர இலக்கங்கள் என்பவற்றிலுள்ள பிழையான தகவல்களுக்கான பொறுப்பை இத்திணைக்களம் ஏற்காது என்பதுடன் பரீட்சைத் திணைக்களத்தின் உத்தியோகபூர்வ அறிக்கையில் குறிப்பிடப்பட்டுள்ள மாதிரி விண்ணப்பப்படிவத்திற்கு ஏற்ப இங்கு தரப்பட்டுள்ள தகவல்களைக் கொண்டு பரீட்சைக்கு விண்ணப்பிப்பது விண்ணப்பதாரியின் கடமையாகும்.

10. **ஆளடையாளத்தை உறுதிப்படுத்தல் :**

விண்ணப்பதாரிகள் பரீட்சை எழுதுவதற்குப் பரீட்சை மண்டபத்திற்கு வரும் எல்லா வேளைகளிலும் தங்கள் ஆளடையாளத்தை உறுதிப்படுத்திக் கொள்வதற்காகப் பின்வரும் அடையாள அட்டைகளில் **ஒன்றை** சமர்ப்பிக்க வேண்டும்.

(அ) ஆட்களைப் பதிவு செய்யும் திணைக்களத்தினால் வழங்கப்படும் தேசிய அடையாள அட்டை.

(ஆ) செல்லுபடியாகும் கடவுச் சீட்டு (பாஸ்போட்)

11. **பரீட்சைக் கட்டணம் :**
**சகல தனிப்பட்ட விண்ணப்பதாரிகளும் தாம் தோற்றுவதற்கு எதிர்பார்த்திருக்கும் பாடஎண்ணிக்கைக்கேற்ப உரிய கட்டணத்தை செலுத்த வேண்டும்.**

அஞ்சல் அலுவலகத்தில் அல்லது உப அஞ்சல் அலுவலகத்தில் உரிய பரீட்சைக் கட்டணத்தைச் செலுத்திப் பற்றுச்சீட்டைப் பெற்றுக்கொள்ள வேண்டும். கட்டணம் செலுத்திப் பெற்றுக்கொண்ட பற்றுச்சீட்டை விண்ணப்பப்படிவத்தில் உரிய கூட்டில் ஒட்டி அனுப்ப வேண்டும். (அதன் போட்டோ பிரதியொன்றையும் பதிவுத் தபாலில் அனுப்பியமைக்கான பற்றுச்சீட்டையும் விண்ணப்பதாரி தம்வசம் வைத்திருத்தல் வேண்டும்.) காசுக்கட்டளைகள் ஏற்றுக்கொள்ளப்படமாட்டாது.

**முக்கிய கவனத்திற் கொள்ள வேண்டியவை :**

(அ) இப்பரீட்சைக்கென செலுத்தப்பட்ட கட்டணம் முழுமையாக அல்லது பகுதியாக மீளளிக்கப்படவோ அல்லது வேறு பரீட்சைக்கான கட்டணமாக மாற்றப்படவோ இடமளிக்கப்படமாட்டாது.

(ஆ) **பரீட்சார்த்திகள் பரீட்சைக்கு விண்ணப்பப்படிவங்களைச் சமர்ப்பித்த பின்னர் எக்காரணத்திற்காகவேனும் பரீட்சை நிலையமோ, விண்ணப்பித்த ஊடக மொழியோ அல்லது பாடங்களோ பின்னர் மாற்றம் செய்யப்படமாட்டாது. எனவே தங்களின் விண்ணப்பப்படிவத்தை சரியாகப் பூர்த்தி செய்ய**

(இ) **விண்ணப்பப்படிவம் கோரப்படும் இறுதித் திகதிக்குப் பின் அஞ்சல் அலுவலகத்திற்கு பணம் செலுத்தியுள்ள விண்ணப்பப்படிவங்களும், இறுதித் தினத்திற்குப் பின் கிடைக்கப்பெறும் விண்ணப்பப்படிவங்களும் நிராகரிக்கப்படும்.**

(ஈ) இரண்டாம் பாடத்தொகுதிக்குரிய

(40) சங்கீதம் (கீழைத்தேயம்)
(41) சங்கீதம் (மேலைத்தேயம்)
(42) சங்கீதம் (கர்நாடகம்)
(44) நடனம் (சுதேச)
(45) நடனம் (பரதம்)
(50) நாடகமும் அரங்கியலும் (சிங்களம்)
(51) நாடகமும் அரங்கியலும் (தமிழ்)
(52) நாடகமும் அரங்கியலும் (ஆங்கிலம்)

ஆகிய பாடங்களுக்காக விண்ணப்பிக்கும் விண்ணப்பதாரிகள் **செய்முறைப் பரீட்சைக்குத் தோற்ற வேண்டும். எழுத்துப் பரீட்சை, செய்முறைப் பரீட்சை ஆகிய இரு பகுதிகளுக்கும் தோற்றிய பரீட்சார்த்திகளுக்கு மாத்திரமே இறுதிப் பெறுபேறு வழங்கப்படும்.**

பி.சனத் பூஜித
பரீட்சை ஆணையாளர் நாயகம்

6/4/2018 /1
பாடசாலைப் பரீட்சைகள் ஒழுங்கமைப்பு, பெறுபேற்றுக் கிளை,
இலங்கைப் பரீட்சைத் திணைக்களம்,
தபாற்பெட்டி 1503, கொழும்பு.
2018 ஏப்ரல் மாதம் 24ஆம் திகதி.

# மாதிரி விண்ணப்பப்படிவம்

## கல்விப் பொதுத் தராதரப் பத்திர (சாதாரண தர)ப் பரீட்சை - 2018 டிசெம்பர்

**(அறிவுறுத்தல்களை வாசிக்க.)**

(அலுவலக உத்தியோகத்திற்கு)

01. பரீட்சைக்குத் தெரிவு செய்த மாவட்டம், நகரமும் நகர எண்ணும்
மாவட்டம் : .................................................. நகரம் : ...................................... நகர எண் [ ]

(பரீட்சைக்கு தோற்றவுள்ள தனிப்பட்ட விண்ணப்பதாரிகள் தமது நிரந்தர வதிவிடத்திற்குக் கிட்டிய நகரத்தை கொடுக்கப்பட்டுள்ள நகரப் பட்டியலுக்கமைய தெரிவு செய்ய வேண்டும்.)

02. விண்ணப்பதாரியின் முழுப்பெயர் (**பிறப்புச்சான்றிதழில் குறிப்பிட்டுள்ளவாறு** பயன்படுத்தப்பட்டு வருகின்ற பெயரை உள்ளடக்கவும். பின்னர் பெயர் திருத்தங்கள் செய்யப்படமாட்டாது.

I. ஆங்கிலத்தில் (கெப்பிற்றல் எழுத்தில்)..........................................................................................

..........................................................................................................................................

II. தமிழில் :..........................................................................................................................

..........................................................................................................................................

03. முகவரி : ஆங்கிலம் (கெப்பிற்றல் எழுத்தில்) II. தமிழில்

.................................................................... ....................................................................

.................................................................... ....................................................................

.................................................................... ....................................................................

04. பால் : ஆண் [0] பெண் [1]

05. பிறந்த திகதி : ஆண்டு [ | | | ] மாதம் [ | ] திகதி [ | ]

06. தேசிய அடையாள அட்டையின் இலக்கம்: [ | | | | | | | | | ]

07. தொலைபேசி இலக்கம் : [ | | | | | | | | | ]

08. மொழிமூலம் : சிங்களம் [2] தமிழ் [3] ஆங்கிலம் [4] இரு ஊடகமொழி [5]

09. செலுத்திய பரீட்சைக் கட்டணம் : ..................................................

I. பற்றுச்சீட்டு இலக்கம் : ........................................ II. திகதி : ................................................

III. செலுத்திய அஞ்சல் அலுவலகம் : ..........................................................................................

10. தோற்றும் பாடங்களின் முழுத்தொகை : [ ]

11. **இரு ஊடக மொழிகளில் தோற்றும் பரீட்சார்த்திகள் மாத்திரம்** ஒவ்வொரு பாடத்திற்கும் தோற்றும் **ஊடக மொழியை உரிய அடைப்பினுள் குறிப்பிடவும்.**

| விண்ணப்பிக்கும் பாடங்கள் | மொழி | பாட எண் | விண்ணப்பிக்கும் பாடங்கள் | மொழி | பாட எண் |
|---|---|---|---|---|---|
| 01. .......................................... | [ ] | [ ] | 07. முதலாம் பாடத்தொகுதி .................................................. | [ ] | [ ] |
| 02. .......................................... | [ ] | [ ] | | | |
| 03. .......................................... | [ ] | [ ] | 08. இரண்டாம் பாடத்தொகுதி .................................................. | [ ] | [ ] |
| 04. .......................................... | [ ] | [ ] | | | |
| 05. .......................................... | [ ] | [ ] | 09. மூன்றாம் பாடத்தொகுதி .................................................. | [ ] | [ ] |
| 06. .......................................... | [ ] | [ ] | | | |

12. விண்ணப்பதாரியின் சான்றிதழ்

இவ்விண்ணப்பப்படிவத்தில் காட்டப்பட்டுள்ள சகல விவரங்களும் சரியானவை என்றும் உண்மையானவை என்றும் இப்பரீட்சை தொடர்பான விதிகளுக்கும் பரீட்சார்த்திகளுக்கு விதிக்கப்பட்டுள்ள சட்ட திட்டங்களுக்கும் உடன்படுகிறேன் என்றும் அதற்குக் கட்டுப்படுகிறேன் என்றும் இப்பரீட்சை தொடர்பாக பரீட்சை ஆணையாளர் நாயகத்தினால் எடுக்கப்படும் தீர்மானங்களுக்கு உடன்படுவேன் என்றும் இத்தால் தெரிவிக்கிறேன்.

திகதி :......................................... ..........................................................

விண்ணப்பதாரியின் கையொப்பம்

13. பற்றுச்சீட்டின் மூலப்பிரதியை கழராதபடி ஒட்டவும். அதன் போட்டோ பிரதியொன்றை தம்மிடம் வைத்துக்கொள்ளவும். **பற்றுச்சீட்டின் மூலப்பிரதி ஒட்டப்படாத விண்ணப்பப்படிவங்கள் நிராகரிக்கப்படும்.**

| பாடங்களின் எண்ணிக்கை | 1 | 2 | 3 | 4 | 5 | 6 - 9 வரை |
|---|---|---|---|---|---|---|
| கட்டணம் | 100/- | 150/- | 200/- | 250/- | 300/- | 350/- |

தபால் அலுவலகத்தில் / உப தபால் அலுவலகத்தில் பரீட்சைக் கட்டணத்தைச் செலுத்தி பெற்றுக் கொண்ட பற்றுச்சீட்டு இங்கு கழராதபடி ஒட்டப்பட வேண்டும். **அதன் நிழற் பிரதியொன்றை தம்முடன் வைத்துக்கொள்ளுமாறு அல்லது பற்றுச்சீட்டின் இலக்கம், திகதி, தபால் அலுவலகத்தின் பெயர் என்பவற்றை எழுதி தம்முடன் வைத்துக்கொள்ளுமாறு விண்ணப்பதாரிகள் கேட்கப்படுகிறீர்கள்.**

14. **கையொப்பத்தை உறுதிப்படுத்தல்:**

கையொப்பம் உறுதிப்படுத்துபவரின் முன்னிலையில் விண்ணப்பதாரி கையொப்பமிடல் வேண்டும். கையொப்பத்தை உறுதிப்படுத்துபவராலேயே பிறப்புச் சான்றிதழிலுள்ள பிறந்த திகதியும் தேசிய அடையாள அட்டையின் இலக்கமும் விண்ணப்பப்படிவத்தில் எழுதப்படல் வேண்டும்.

(அ) இவ்விண்ணப்பத்தைச் சமர்ப்பிக்கும்.......................................................................................................
எனும் பெயருடைய விண்ணப்பதாரியை எனக்குத் தனிப்பட்ட முறையில் தெரியும்.

(ஆ) விண்ணப்பதாரியின் கையொப்பம் : .......................................................................................................

(இ) விண்ணப்பதாரியின் முகவரி : .......................................................................................................

: .......................................................................................................

(ஈ) அவரின் பிறப்புச் சான்றிதழின்படி அவரின் பிறந்த திகதி .................................. என்பதையும் பிறப்புச் சான்றிதழ் இலக்கம் ............................................ என்பதையும், அவரின் தேசிய அடையாள அட்டை இலக்கம் ...................................................... என்பதையும், அவர் என் முன்னிலையில் கையொப்பமிட்டார் என்பதையும் உறுதிப்படுத்துகின்றேன்.

உறுதிப்படுத்தும் கிராம அலுவலரின் கையொப்பம் : .......................................................................................

உறுதிப்படுத்தும் கிராம அலுவலரின் பெயர் : .......................................................................................

கிராம அலுவலர் பிரிவும், இலக்கமும் : .......................................................................................

(பதவிக்குரிய பதவி முத்திரையை இடவும்.)

முகவரி : .......................................................................................................................................

.......................................................................................................................................

திகதி : ..............................................................................

## விண்ணப்பப்படிவத்தைப் பூர்த்தி செய்வதற்கான அறிவுறுத்தல்கள்

01. பரீட்சை நிலையங்கள் நிறுவப்படும் நகரங்கள் கீழே காட்டப்பட்டுள்ள நகரப் பட்டியலிலிருந்து தாம் **தெரிவுசெய்த மாவட்டத்தையும் நகரத்தையும் மற்றும் நகர எண்ணையும்** தெளிவாக அடைப்பில் எழுதவும். **கொடுக்கப்பட்டுள்ள நகரப்பட்டியலுக்கமைய** தங்கள் நிரந்தர வதிவிடத்திற்குக் கிட்டிய நகரத்தை தெரிவு செய்யவும்.

02. முழுப்பெயர் **(பிறப்புச்சான்றிதழில் குறிப்பிட்டுள்ளவாறு முழுப்பெயரை ஆங்கில கெப்பிற்றல் எழுத்துக்களிலும் தமிழிலும் எழுதவும். பெயர் திருத்தம் தொடர்பாக பின்னர் விடுக்கப்படும் வேண்டுகோள் நிராகரிக்கப்படும்.)**
உதாரணம் : (I) **PONNAIYAH UTHAYARANI**
(II) பொன்னையா உதயராணி

03. முழுமையான முகவரியை **(ஆங்கில கெப்பிற்றல் எழுத்திலும் தமிழிலும் எழுதவும்)**
**உதாரணம் :** (I) ஆங்கிலத்தில் : No 12, **NAVALA ROAD, KALKUDAH,**
(II) தமிழில் : இல 12, நாவல வீதி, கல்குடா.

04. உரிய கூட்டினுள் புள்ளடி இடவும்.
உதாரணம் : ஆண் விண்ணப்பதாரி எனின், ஆண் [☒ 0] பெண் [1]

05. உங்களின் பிறந்த திகதியை உரிய அடைப்பினுள் எழுதுங்கள்.

06. தேசிய அடையாள அட்டையின் இலக்கத்தை மாத்திரம் எழுதுங்கள். (அஞ்சல் அறிமுக அட்டையினதோ அல்லது கடவுச்சீட்டினதோ இலக்கத்தை **எழுத வேண்டாம்.)**

07. விண்ணப்பப்படிவத்தில் காணப்படும் குறைபாடுகள் தொடர்பாக விசாரிப்பதற்குத் தேவையான சந்தர்ப்பத்தில் பயன்படுத்துவதற்காக **தங்களின் தொலைபேசி எண்ணை** இங்கு குறிப்பிடவும்.

08. உரிய கூட்டில் புள்ளடியிடுக.
உதாரணம் : **தமிழ் மொழிமூல** பரீட்சார்த்திகளாயின்
சிங்களம் [2] தமிழ் [☒ 3] ஆங்கிலம் [4] இரு ஊடகமொழி [5]
**இரு ஊடக மொழியில்** தோற்றும் பரீட்சார்த்திகளாயின்
சிங்களம் [2] தமிழ் [3] ஆங்கிலம் [4] இரு ஊடகமொழி [☒ 5]

09. **பரீட்சைக் கட்டணம்:**

(i) பரீட்சைக்குரிய கட்டணத்தை அஞ்சல் அலுவலகம் அல்லது உப அஞ்சல் அலுவலகத்தில் செலுத்தி அதற்கான பற்றுச்சீட்டைப் பெற்று உரிய விவரங்களை விண்ணப்பப்படிவத்தில் குறிப்பிடுங்கள். (அப்பற்றுச் சீட்டின் போட்டோ பிரதியொன்றை தம்மிடம் வைத்துக்கொள்ளுங்கள்.)

(ii) ஒரு பாடத்திற்கு ரூபா 100/- (நூறு), இரண்டு பாடங்களுக்கு ரூபா 150/- (நூற்றைம்பது), மூன்று பாடங்களுக்கு ரூபா 200/- (இருநூறு), நான்கு பாடங்களுக்கு ரூபா 250/-(இருநூற்றி ஐம்பது), ஐந்து பாடங்களுக்கு ரூபா 300/- (முந்நூறு), ஆறு முதல் ஒன்பது பாடங்களுக்கு ரூபா 350/- (முந்நூற்று ஐம்பது)

10. தோற்றும் பாடங்களின் தொகையை எழுதுங்கள்
உதாரணம் : 09 பாடங்களுக்குத் தோற்றுவதாயின், [**09**]

11. இதன் இறுதியிலுள்ள பாடப்பட்டியலின்படி தாம் தோற்றவுள்ள **பாடங்களையும் பாட எண்ணையும் ஊடகமொழியையும்** சரியாகக் குறிப்பிடுங்கள். **விண்ணப்பப்படிவத்தில் குறிப்பிட்ட பாடங்களை பின்னர் மாற்றம் செய்வதற்கு இடமளிக்கப்படமாட்டாது.** (சிங்களம் - 2, தமிழ் - 3, ஆங்கிலம் - 4 எனக் குறிப்பிடவும்.)

**<u>மிக முக்கியம்</u> : ***
**இரு மொழிகளில் பரீட்சைக்குத் தோற்றும் பரீட்சார்த்திகள் மாத்திரம் மொழி குறிப்பிடப்பட்டுள்ள அடைப்பினுள் ஒவ்வொரு பாடத்திற்கும் தோற்றும் ஊடக மொழியைக் குறிப்பிட வேண்டும். ஓர் ஊடக மொழியிலேயே சகல பாடங்களுக்கும் தோற்றுவதாயின் இம்மொழி அடைப்பைப் பூரணப்படுத்த தேவையில்லை.**

பாடங்களைத் தெரிவு செய்தல் :
(அ) கீழ்க் காட்டப்பட்டுள்ள வரையறையின் கீழ்ப் பரீட்சார்த்திகள் 09 பாடங்களைத் தெரிவுசெய்ய முடியும்.

| பாட எண் | பாடங்கள் |
|---|---|
| (11) முதல் (16) வரை | சமயம் |
| (21/22) | மொழியும் இலக்கியமும் [(21) சிங்களம் / (22) தமிழ்)] |
| (31) | ஆங்கில மொழி |
| (32) | கணிதம் |
| (33) | வரலாறு |
| (34) | விஞ்ஞானம் |
| (60) முதல் (75) வரை | முதலாம் பாடத்தொகுதி |
| (40) முதல் (52) வரை | இரண்டாம் பாடத்தொகுதி |
| (80) முதல் (94) வரை | மூன்றாம் பாடத்தொகுதி |

ஒவ்வொரு பாடத்தொகுதியிலிருந்தும் ஒவ்வொரு பாடத்தை மாத்திரம் தெரிவு செய்ய முடியும். 21 - சிங்கள மொழியும் இலக்கியமும் பாடத்துக்கு விண்ணப்பிக்கும் விண்ணப்பதாரிக்கு 64 - இரண்டாம் மொழி (சிங்களம்) பாடத்திற்கு விண்ணப்பிக்க முடியாது. அவ்வாறே 22 - தமிழ் மொழியும் இலக்கியமும் பாடத்துக்கு விண்ணப்பிக்கும் விண்ணப்பதாரிக்கு 65 - இரண்டாம் மொழி (தமிழ்) பாடத்திற்கு விண்ணப்பிக்க முடியாது.

12. விண்ணப்பதாரி தனது கையொப்பத்தை உறுதிப்படுத்தச் செல்லும் போது பிறப்புச் சான்றிதழையும் தேசிய அடையாள அட்டையையும் கொண்டு செல்ல வேண்டும். விண்ணப்பப்படிவம் அனுப்பும் வேளையில் தேசிய அடையாளஅட்டை பெற்றிருக்கவில்லையாயின் அதுபற்றி குறிப்பிடவும்.

13. உரிய பரீட்சைக் கட்டணத்தைச் செலுத்தி அஞ்சல் / உப அஞ்சல் அலுவலகத்தில் பெற்றுக் கொண்ட பற்றுச்சீட்டை கழராதபடி உரிய இடத்தில் ஒட்டவும்.

14. **கையொப்பத்தை உறுதிப்படுத்தல்**
தாம் வசிக்கும் கிராம அலுவலர் பிரிவிலுள்ள கிராம அலுவலரினாலேயே உறுதிப்படுத்த வேண்டுமென்பதுடன், கிராம அலுவலரின் பெயர், கிராம அலுவலர் பிரிவு இலக்கம் என்பவற்றைக் குறிப்பிட்டு பதவி முத்திரையிட்டு உறுதிப்படுத்த வேண்டும்.

15. **பார்வைக்குறைபாடுடைய விண்ணப்பதாரிகள் / பிரேல் மொழி விண்ணப்பதாரிகள் / விசேட தேவைகள் உடைய விண்ணப்பதாரிகள்:**
பார்வைக்குறைபாடுடைய விண்ணப்பதாரிகள் / பிரேல் மொழி விண்ணப்பதாரிகள் / விசேட தேவைகள் உடைய விண்ணப்பதாரிகளுக்காக அனுப்பப்படும் விண்ணப்பப்படிவத்தின் **இடதுபக்க மேல் மூலையில் "பார்வைக் குறைபாடுடைய விண்ணப்பதாரி / பிரேல் மொழி விண்ணப்பதாரி / விசேட தேவைகள் உடைய விண்ணப்பதாரி"** என சிவப்பு நிறத்தால் குறிப்பிட வேண்டும்.

## பாடப்பட்டியல்

✷ **சமயம்**

(11) பௌத்தம்
(12) சைவநெறி
(14) கத்தோலிக்க திருமறை
(15) கிறிஸ்தவம்
(16) இஸ்லாம்

✷ **மொழியும் இலக்கியமும்**

(21) சிங்கள மொழியும் இலக்கியமும்
(22) தமிழ் மொழியும் இலக்கியமும்

✷ (31) ஆங்கில மொழி
✷ (32) கணிதம்
✷ (33) வரலாறு
✷ (34) விஞ்ஞானம்

✷ **முதலாம் பாடத் தொகுதி**

(60) வணிகமும் கணக்கீட்டுக் கல்வியும்
(61) புவியியல்
(62) குடியியற் கல்வி
(63) முயற்சியாண்மைக் கல்வி
• (64) இரண்டாம் மொழி(சிங்களம்)
•• (65) இரண்டாம் மொழி (தமிழ்)
(66) பாளி
(67) சமஸ்கிருதம்
(68) பிரெஞ்சு
(69) ஜேர்மன்
(70) ஹிந்தி
(71) ஜப்பான்
(72) அரபு
(73) கொரியன்
(74) சீன மொழி
(75) ரஷியன்

✷ **இரண்டாம் பாடத் தொகுதி**

(40) சங்கீதம் (கீழைத்தேய)
(41) சங்கீதம் (மேலைத்தேய)
(42) சங்கீதம் (கர்நாடகம்)
(43) சித்திரம்
(44) நடனம் (சுதேச)
(45) நடனம் (பரதம்)
(46) இலக்கிய நயம் ஆங்கிலம்
(47) இலக்கிய நயம் சிங்களம்
(48) இலக்கிய நயம் தமிழ்
(49) இலக்கிய நயம் அரபு
(50) நாடகமும் அரங்கியலும்(சிங்களம்)
(51) நாடகமும் அரங்கியலும்(தமிழ்)
(52) நாடகமும் அரங்கியலும்(ஆங்கிலம்)

✷ **மூன்றாம் பாடத்தொகுதி**

(80) தகவல் தொடர்பாடல் தொழினுட்பம்
(81) விவசாயமும் உணவுத் தொழினுட்பவியலும்
(82) நீரூயிரினவளத் தொழினுட்பவியல்
(84) நுண்கலை
(85) மனைப்பொருளியல்
(86) சுகாதாரமும் உடற்கல்வியும்
(87) தொடர்பாடலும் ஊடகக் கற்கையும்
(88) வடிவமைப்பும் நிருமாணத் தொழினுட்பவியலும்
(89) வடிவமைப்பும் இயந்திரத் தொழினுட்பவியலும்
(90) வடிவமைப்பும் மின் இலத்திரனியல் தொழினுட்பவியலும்
(92) மின் ஆவணப்படுத்தலும் சுருக்கெழுத்தும் (சிங்களம்)
(93) மின் ஆவணப்படுத்தலும் சுருக்கெழுத்தும் (தமிழ்)
(94) மின் ஆவணப்படுத்தலும் சுருக்கெழுத்தும் (ஆங்கிலம்)

• தமிழ்மொழியைத் தாய்மொழியாகக் கொண்டவர்களுக்குரிய இரண்டாம் மொழி
•• சிங்களமொழியைத் தாய்மொழியாக கொண்டவர்களுக்குரிய இரண்டாம் மொழி